செ.வெ.எண்: 995/2017 நாள்: 27.12.2017

**மீன்பிடி பணியில் இருந்தபோது ஒகி புயலால் கடலில் மூழ்கி உயிரிழந்த இரு மீனவர் குடும்பத்திற்கு தலா ரூ. 20 இலட்சம் நிதியுதவி - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

குமரி மாவட்டத்திலிருந்து விசைபடகில் ஆழ்கடல் மீன்பிடி தொழிலுக்கு சென்று தொழிலில் ஈடுபட்டிருந்தபோது, ஒகி புயலால் படகு கவிழ்ந்து, கடலில் மூழ்கி உயிரிழந்த கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குளச்சல் மரமடி தெருவை சேர்ந்த ஜஸ்டின்பாபு மற்றும் மணக்குடி கோயில் தெருவை சார்ந்த மைக்கேல்அமீன் ஆகியோர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறியதோடு, தலா ரூ. 20 இலட்சம் நிதியுதவி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், ஜஸ்டின்பாபு வாரிசுதாரரான திருமதி நந்தினி மற்றும் மைக்கேல் அமீன் வாரிசுதாரரான திருமதி சகாயரோஸி ஆகியோர்களுக்கு நிவாரண நிதியுதவியாக தலா ரூ.20 இலட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (27.12.2017) வழங்கி, ஆறுதல் கூறினார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.